[1983 சனவரி 27]

அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) விதியின்கீழ பேரவைமுன் வைக்கப்பெற்றது].

120. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஏ ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 618-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைககப் பெற்றது).

121. 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31-3-1981 ஆம் தேதிவரையிலான ஐந்தொகைக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) 1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(5) (அ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

122. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்) (ஆங்கிலம்) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேவைமுன் வைக்கப் பெற்றது.]

அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை,

இணைப்பு-1

74-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 20க்கான விடையைக் காண்க)

(அ) ஆம்;

(ஆ) உதவி இயக்குநர்கள் பதவியில் உள்ளவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுகிறார்கள். இப்பதவிகளுக்கு எந்த ஒரு சிறப்புக் கல்வித் தகுதிகளும் நிர்ணயிக்கவில்லை. இவர்கள் தனிப்பட்ட விஷயங்கள் எதிலும் ஸ்பெஷலிஸ்ட் ஆக தேர்ச்சி பெற தேவையில்லை. இவர்கள் மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களில் மண்டல இணை இயக்குநர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக பணிபுரிகிறார்கள்.

(இ) கால்நடை பராமரிப்புத் துறையில் உதவி இயக்குநர்கள் ஆளுகையின்கீழ் அவ்வப்போது எழுகின்ற தனிப்பட்ட முக்கிய பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்களால் தீர்வு காண முடியாத நிலை ஏற்படும்போது மேற்படி பிரச்சினைகளில் தீர்வு காணும் பொருட்டு மண்டல இணை இயக்குநர் தங்களது அலுவலகத்தில் பணியாற்றும் வல்லுநர்களை (Specialists) அனுப்ப வேண்டும். மேலும் மேற்படி வல்லுநர்கள் மண்டல அலுவலகங்களில் மண்டல இணை இயக்குநர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர்களாக பணிபுரிவதோடு மண்டல இணை இயக்குநர்கள் வெளியூர் (முகாம்) சென்றுள்ள காலங்களில் அலுவலகத்தின் முக்கிய பணிகளையும் கவனித்து வருகின்றனர்.